# In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.

EA.4/2024 in EP.2/2020 in OS.No 27/201 தேதி-17.06.2025

(P.W.1) - ஜெனிகுமாரி

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. 3-ஆம் எதிர்மனுதாரர் ராஜமணி என்பவரின் மொத்த சொத்தையும் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். அசல் வழக்கு எண். 27/2015-ல் தாக்கல் செய்த பிறகு தான் 3-ஆம் எதிர்மனுதாரர் ராஜமணி எனக்கு கிரைய ஆவணம் எழுதி தந்தார் என்றால் இல்லை. இந்த மனு பட்டிகை சொத்தின் மீது மட்டும் தான் 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் ஏலம் நடவடிக்கை எடுத்தார்கள் என்றால் சரிதான். மேற்சொன்ன மனு சொத்தானது ராஜமணி என்பவரால் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 27/2015 in IA.No 140/2015 செக்ருட்டியாக தாக்கல் செய்யப்பட்ட சொத்து என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு விலைக்கு வாங்கும் போது எனக்கு தெரியாது நோட்டீஸ் ஒட்டிய போது தான் எனக்கு தெரியவந்தததது.

2. அசல் வழக்கு எண். 27/2015 தாக்கல் செய்யப்பட்டபோது மனு சொத்து 3-ஆம் எதிர்மனுதாரர் ராஜமணி பெயரில் தான் இருந்தது என்றால் வழக்கு பற்றி எனக்கு தெரியாது நான் விலைக்கு வாங்கும் போது ராஜமணி பெயரில் தான் சொத்து இருந்தது. ராஜமணி என்பவர் எனக்கு கிரைய ஆவணம் எழுதி கொடுக்கும் முன்பே அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் செக்ருட்டியாக தாக்கல் செய்திருந்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வில்லங்க சான்றிதழ் சரிபார்த்தப்போது எந்த வில்லங்கமும் இல்லாததால் கிரையம் வாங்கினேன். மேற்சொன்ன 3-ஆம் எதிர்மனுதரார் ராஜமணி என்பவர் நீதிமன்றத்தில் செக்ருட்டியாக வழங்கிய சொத்தை விலைக்கு வாங்கியுள்ளேன் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது மொத்த சொத்தையும் விலைக்கு கொடுத்துதான் வாங்கினேன்.

3. நீதிமன்றல் அசல் ஆவணம் ஒப்படைத்து 5 மாதங்களுக்கு பிறகு 17.12.2015 -ம் தேதி கிரையம் வாங்கினேன் என்றால் மேற்சொன்ன தேதியில்தான் கிரையம் வாங்கினேன் ஆனால் நீதிமன்றத்தில் ஆவணம் ஒப்படைத்திருப்பது தெரியாது. மேற்சொன்ன மனு சொத்து தொடர்பாக அசல் ஆவணம் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டதாலும் அந்த சொத்தைப் பொருத்து பிணை ஆவணம் நீதிமன்றத்தில் எழுதி கொடுத்திருப்பதால் மா.சா.ஆ.1 -ன் படி மனு பட்டிகை சொத்தின் மீதும் எந்த உரிமையையும் கோர முடியாது என்றால் சரியல்ல. இந்த மனு சொத்து தொடர்பாகவும்

ஏனைய சொத்து தொடர்பாக 1,2,3 எதிர்மனுதாரர்களுக்கும் அனுப்பட்ட வழக்கறிஞரின் அறிவிப்பானது 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் ஜீவணாசம் கேட்டு அசல் வழக்கு தாக்கல் செய்த பிறகு அனுப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

4. மா.சா.ஆ.5, மா.சா.ஆ.1 ஆவணமானது 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்த ஜீவணாசம் தாக்கல் செய்த பிறகு அவ்வழக்கில் இருந்து தப்பிக்க 3-ஆம் எதிர்மனுதாரால் ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. மா.சா.ஆ.4 ஆவணத்தில் கிரைய முடிப்பதற்கான காலக்கேடு 2 வருடங்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்சொனன ஒப்பந்தப்படி 2 வருடத்தில் கிரையம் முடிக்கப்படாமல் 4 வருடங்கள் பிறகுதான் கிரையம் முடிக்கப்பட்டது என்றால் சரிதான். மீதி கிரைய தொகையை செலுத்தியதாக மா.சா.ஆ 7 முதல் 9 வரையான ஆவணங்கள் 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள், 3-ஆம் எதிர்மனுதாரர் மீதும் ஜீவணாசம் கேட்டு வழக்கு தாக்கல் செய்த பிறகு ஏற்படுத்தப்பட்டது என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது.

5. மா.சா.ஆ. 4 ஆவணமான கிரைய ஒப்பந்தம் காலக்கெடு முடிந்த பிறகு 3-ஆம் எதிர்மனுதாரர் எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். மேற்சொன்ன கிரைய ஒப்பந்ததில் சொல்லப்பட்டு 2 ஆண்டுகளுள் கிரைய தொகையை செலுத்தி நான் கிரையத்தை முடித்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான். மா.சா.ஆ.4 ஆவணமானது காலக்கெடு ஒப்பந்ததில் சொல்லப்பட்டு காலம் முடிந்த பிறகும் காலத்தை நீட்டிகொள்ள ஆவணம் ஏதும் ஏற்படுத்தவில்லை என்றால் சரிதான். மா.சா.ஆ. 4 ஆவணம் 1 மற்றும் 2 -ஆம் எதிர்மனுதாரரை ஏமாற்ற வேண்டி நானும் 3-ஆம் எதிர்மனுதாரரும் சேர்ந்து ஏற்படுத்திக்கொண்ட ஆவணம் என்றால் சரியல்ல. மா.சா.ஆ.4 ஆவணத்தில் படி ஏற்படுத்தப்பட்ட மா.சா.ஆ.1 ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த மனு நிலைக்கதக்கதல்ல என்றாலும் இந்த மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.